**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி**
**அ.வ.எண். 35/2014**

இந்நீதிமன்றத்து எழுத்தர் திருமதி பி.கௌசல்யா, உதவியாளர் அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு பிரதிவாதி தரப்பு சாட்சி வாக்கு மூலம் 1873 ஆம் ஆண்டு 10வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2020 ஆண்டு அக்டோபர் மாதம் 16 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் . | சுப்பரமணி | மதம் . | |
| த/பெ . | ஏழுமலை நயக்கர் | ஜாதி . | |
| வயது . | 55 | கிராமம் . | |
| தொழில் . | | வட்டம் . | |

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

ராதாகிருஷ்ணன் இறந்து விட்டாரா என்றால் இறந்து விட்டார். அவருடைய வரிசுகள் யார் என்றால் ராதாகிருஷ்ணன் மனைவி நாகம்மாள் மகன் கஜேந்திரன், மகள் பானு ஆகும். நான் வாங்கிய சொத்து யாரிடமிருந்து வாங்கினேன் என்றால் நாகம்மாள் மற்றும் கஜேந்திரன் என்பவரிடமிருந்து கிரையம் வாங்கினேன். கிரைய பத்திரத்தில் மகள் கையெழுத்து இல்லை என்றால் சரிதான். ராதாகிருஷ்ணனின் தாயார் உயிருடன் இருக்கிறார் என்றால் ஆம். அவருடைய கையெழுத்து கிரைய பத்திரத்தில் இல்லை என்றால் சரிதான். அவர் தான் வழக்கு தாக்கல் செய்துள்ளனார். வழக்கு சொத்தின் மூலபத்திரம் என்னிடம் இல்லை என்றால் வீடு எரிந்தால் மூலபத்திரம் எரிந்துவிட்டது. நாகம்மாள் என்னுடைய உறவினார் என்றால் சரிதான். வழக்கு சொத்து வாதி சுயமாக சம்பதித்து சொத்து அதில் யாருக்கும் பாதியமில்லை என்றால் சரியல்ல. பி.தசா.ஆ.4 சட்டப்படி செல்லாது என்றால் சரியல்ல. சொத்தை விற்றவருக்கே விற்க உரிமை கிடையாது என்றால் சரியல்ல நான் பட்டா பார்த்து தான் வாங்கினேன். என் பெயரில் பட்டா உள்ளதா என்றால் இல்லை. பட்டா மாற்ற சென்ற போது தாகரரு செய்தார்கள் சிட்டா அடங்கல் என் பெயரில் இல்லை என்றால் ஆம். ராதாகிருஷ்ணன் பெயரில் தான் உள்ளது. இந்த சொத்து வாதிக்கு தான் சொந்தம். உறவினார்கள் என்பதால் வாதியை ஏமாற்றும் நோக்கத்துடன் பி.த.சா.ஆ4யை தயரித்து உள்ளேன் என்றால் சரியல்ல. வழக்கு சொத்தில் வாதி தான் சுவாதிணத்தில் உள்ளனார் என்றால் சரியல்ல. எனவே தாவா படி தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல. 2006லிருந்து வழக்கு சொத்தில் நான் தான் பயிர் செய்து வருகிறேன்.

**மறு விசாரணைக்காக இவ்வழக்கு ஒத்திவைக்கப்படுகிறது.**